கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் 30.08.2024 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில், பங்கேற்று, விவசாயிகளிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்து, விவசாயிகளிடம் கலந்துரையாடினார். உடன் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி, இணை இயக்குநர் (வேளாண்மை (பொ) திருமதி ம.லெட்சுமி பிரபா, இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், வருவாய் கோட்டாட்சியர்கள் விஜயகுமார் (சிவகங்கை), சோ.பால்துரை (தேவகோட்டை), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) சுந்தரமகாலிங்கம் உள்ளிட்ட பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்கள், விவசாயிகள் உட்பட பலர் உள்ளனர்.

கழக தலைவர் – தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்கவும் மாவட்டசெயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., வழிகாட்டுதல் படி பேரூர் கழக செயலாளர் கே.அப்துல்ரஹ்மான் மரக்காயர் ஏற்பாட்டில் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் பேரூர் கழகம் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் அவைதலைவர் வி.முருகானந்தம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மிசா. எஸ்.அகமதுதம்பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் ரவிச்சந்திர ராமவண்ணி, மாநிலமீனவர் அணி துணை தலைவர் டி.ராஜா, கவுன்சிலர், மண்டபம் பேரூராட்சி தலைவர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் வருகை தந்த அனைவரையும் பேரூர் கழக செயலாளர் கே. அப்துல்ரஹ்மான் மரக்காயர், வரவேற்றார். இந்த நிகழ்வில் பேரூர்கழக நிர்வாகிகள், பேரூர்மன்ற உறுப்பினர்கள், மாவட்ட அணியின் நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், வார்டு பிரதிநிதிகள், மகளிர் அணி, சார்பு அணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடு பேரூர் கழக செயலாளர் கே.அப்துல்ரஹ்மான், மரக்காயர், தலைமை சேர்மன் ராஜா, தீர்மானம் வாசித்தவர் எஸ்.சாதிக்பாட்சா, கவுன்சிலர், சம்பத்ராஜா, கவுன்சிலர், துணை சேர்மன் நம்புராஜன், இ.மூபாரக், காதர்ஜான் எஸ்.அயூப்கான், ராஜகோபால் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை!

# திருமதி ஜோன்ஸ் ரூசோ மகன் திருமணம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைக்கிறார்!

*சிவகங்கை.செப்.5-* சிவகங்கை மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் திருமதிஆர். ஜோன்ஸ் ருசோ. இவரது மகன் நடிகருமான ஆர்.நிஷாந்த். ரூசோவிற்கும் கல்லடிதிடலை சேர்ந்த எல்.எட்வர்ட் ஜோசப் திருமதி மஞ்சுளா மேரி ஆகியோரின் மகள் எ.சினேகா கேத்தரின் ஆகியோரது திருமணம் நாளை (6.9.2024 - வெள்ளிக்கிழமை) காலை 11 மணியளவில் காரைக்குடி உள்ள பி.எல்.பி பேலஸ் மஹாலில் கூட்டுறவுத்துறை அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான கேஆர். பெரியகருப்பன் தலைமையில் அமைச்சர்கள் கே.என். நேரு, தங்கம் தென்னரசு, எஸ். ரகுபதி,எஸ் .எஸ். சிவசங்கர், சி.வி மெய்யநாதன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், இந்திய ஜனநாயக கட்சி தலைவர் ரவி பச்சமுத்து, இந்திய ஜனநாயக கட்சியின் அகில இந்திய இணைபொது செயலாளர் திருமதி லீமா ரோஸ் மார்டின் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. திருமணத்தினை கழகத் துணை பொதுச்செயலாளரும், பாராளுமன்ற குழு தலைவருமான திருமதி கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைத்து சிறப்புரையாற்றுகிறார். திருமணத்தில் மணமக்களை வாழ்த்தி முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் எம்.பி. ராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், வசந்தம் கார்த்திகேயன், எஸ். மாங்குடி, இ.கருணாநிதி, கார்த்தி ப..சிதம்பரம் எம்.பி. உட்பட மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்துக் கட்சியினர் வாழ்த்திப் பேசுகிறார்கள். திருமண விழா ஏற்பாடுகளை திருமதி ஆர் ஜோன்ஸ்ருசோ, ராஜா ஸ்டீபன், ஆர் . ஜெம்மா. நிபிலா, க.அழகையா மற்றும் குடும்பத்தினர்கள் செய்து வருகிறார்கள்.

தலைமை பொதுக்குழு உறுப்பினர் திருமதி ஆதி. கண்ணாத்தாள் ஆதி. அதியமான் மகன் ஆதி. ராமசாமி கோவை அன்புநாதன் கீதா ஆகியோரின் பதல்வி அ.சுவேதா ஆகியோரது திருமணம் நாளை6ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி அளவில் காரைக்குடியில் உள்ள சுபலட்சுமி மஹாலில் நடைபெறுகிறது . மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் தலைமையில் அமைச்சர்கள் எஸ். ரகுபதி, தங்கம் தென்னரசு ,சிவ வீ. மெய்ய நாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் திருமணத்தினை கழக துணை பொது செயலாளரும் நாடாளுமன்ற குழு தலைவர் திருமதி கனிமொழி எம்.பி. நடத்தி வைத்து சிறப்புரையாற்றுகிறார். மணமக்களை வாழ்த்தி தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் முன்னாள் ஒன்றிய நிதிய மைச்சர் ப. சிதம்பரம் எம்.பி.காரைக்குடி மேயர் எஸ். முத்து துரை, துணை மேயர் என். குணசேகரன், முன்னாள் எம்.எல்.ஏ .கே ஆர். ராமசாமி, கார்த்திப.சிதம்பரம் எம்.பி, எம்.எல்.ஏ க்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார்,எஸ்.மாங்குடி, ராம. கரி.மாணிக்கம், தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன் மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன் மற்றும் நிர்வாகிகள் வாழ்த்திப் பேசுகிறார்கள். திருமண விழா ஏற்பாடுகளை பொதுக்குழு உறுப்பினர் ஆதி கண்ணாத்தாள் , அதியமான் ஆகியோர் செய்து வருகிறார்கள்.

இத்திருமண நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக கனிமொழி கருணாநிதி எம்.பி. இன்று 5ம்தேதிவியாழக்கிழமை மாலை காரைக்குடிக்கு வருகை தருகிறார்.

### சென்னையில் ரோந்துப் பணியின்போது

# உடல்நலக் குறைவால் உயிரிழந்த காவலர் குடும்பத்துக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 5-

சென்னையில் ரோந்துப் பணியின் போது உடல்நலக் குறைவு ஏற்பட்டு உயிரிழந்த காவலர் குடும்பத்திற்கு ஆறுதல் கூறியதுடன் நிதியுதவி வழங்கிடவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் உத்தரவு வருமாறு:-

சென்னை, மீனம்பாக்கம் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த ரவிக்குமார் (வயது 59) என்பவர் நேற்று (3.9.2024) காலை மீனம்பாக்கம் அருகில் தேசிய நெடுஞ்சாலையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த நிலையில் காலை 11.15 மணியளவில் நெஞ்சுவலி ஏற்பட்டு சாலையோரத்தில் மயங்கி விழுந்து உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

முதல்நிலைக் காவலர் ரவிக்குமார் அவர்களின் மறைவு தமிழ்நாடு காவல் துறைக்கும் அவரது குடும்பத்திற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

ரவிக்குமார் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணியாற்றும் காவல் துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்திற்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### நடைபெறவுள்ள சட்டமன்றப் பொதுத் தேர்தலில்

# நெல்லை மாநகரக் கழகத்தினர் ஒன்றிணைந்து செயல்படுவோம்!

## மாநகரக் கூட்டத்தில் தீர்மானம்! தலைமை: டி.பி.எம். மைதீன்கான்! சு.சுப்பிரமணியன் வரவேற்பு!

*நெல்லை.செப்.5.* நெல்லை மாநகர தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம் தச்சநல்லூர் ஜி.வி.மகாலில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான் தலைமையில் மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ். லெட்சுமணன் பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன் (தச்சை) அன்டன் செல்லத்துரை (பாளை)சாகுல் ஹமீது (மேலப்பாளையம்) நமச்சிவாயம் (நெல்லை)மாநகர துணை செயலாளர்கள் அப்துல் கையூம் பாலமுருகன் என்ற பிரபு,சுதாமூர்த்தி,மாநகர பொருளாளர் அண்ணாதுரை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை,மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன்,துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலை யில் நடைபெற்றது.

மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான் ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.

நிகழ்வில் இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மீரான் மைதீன், மாயா, அலிஃப் மீரான், இனியன், வட்ட செயலாளர்கள் முத்துராமன், சடாமுனி, சிந்து முருகன், மனோகர், பிரேம் கணேசன்,பி.பி.ராஜா, லெனின், புயல் மீனாட்சி, ஆனந்த பெருமாள், அருள், மாரிமுத்து,கேபிள் குமரேசன், கிச்சி கிருஷ்ணன், தென்கரை முத்து, கதிரேசன், அருள் இளங்கோ, ஜெயின் உசைன், ஆவின் கல்யாணி, பால மகேஷ், செல்வகுமார்,கிங் பாலா, ஜாய் மரகதம், இசக்கி, காஜா மைதீன், அகமது பாதுஷா, ராபர்ட் செல்லையா, தளவாய், மேகை செல்வம், செந்தில் முருகன்,வேல் முருகன் மற்றும் மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள்,வட்ட கழக நிர்வாகிகள்,கழக மாமன்ற உறுப்பினர்கள் கழக சொந்தங்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் ஸ்டார் முருகன் நன்றி உரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு.

1.நவீன தமிழ்நாட்டின் தந்தை,ஐந்து முறை தமிழ் நாட்டின் முதலமைச்சராக பொறுப்பு வகித்து, இந்தியாவிற்கு பல பிரதமர்களையும்,குடியரசுத் தலைவர் களையும் அடையாளம் காண்பித்து, தமிழ் நாட்டு அரசியலில் 'கிங்' ஆகவும், இந்திய அரசியலில் கிங் மேக்கராகவும் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்க,தமிழ்நாட்டு மக்களின் சார்பாகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் முதலமைச்சர் தளபதியார் அவர்கள் ஒன்றிய அரசினை வலியுறுத்துதல்.

2.கடந்த 2021 ஆம் ஆண்டு, கழக அரசு பொறுப்பேற்றது முதல் தமிழ்நாட்டை அனைத்து துறைகளிலும் முன்னேற்ற வேண்டும் என்றும், தமிழ் நாட்டின் பொருளாதாரம் ஒரு ட்ரில்லியன் டாலரை எட்ட வேண்டும் என்ற இலக்கோடு இரவு,பகல் பாராது உழைத்துக்கொண்டிருக்கும் முதலமைச்சர் அவர்கள், தன் இலக்கை அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு,தமிழ்நாட்டிற்கு பல புதிய தொழில் முதலீடுகளை ஈட்டுவதற்காக அமெரிக்க நாட்டிற்கு சென்றிருக்கும் தளபதியார் அவர்களின் பயணம் வெற்றிபெற நெல்லை மாநகர தி.மு.க சார்பாக வாழ்த்துகள்.

3.கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், அமைச்சராக பொறுப்பேற்றது முதல், தமிழ் நாட்டு விளை யாட்டுத் துறையை சீரும் சிறப்புமாக வழிநடத்தி, மாநகரங்களில் மட்டும் இல்லாமல் தமிழ்நாட்டின் மூலை முடுக்களில் எல்லாம் இருக்கும் குக்கிராமங்களில் வசிக்கும் சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய இளைஞர்களை கண்டறிந்து அவர்கள் உலக அரங்கில் பல சாதனைகள் புரிய வழிவகை செய்துவருகிறார். இதனைத் தொடர்ந்து, வரலாற்றில் முதல்முறையாக, ஒட்டுமொத்த இந்தியாவே திரும்பி பார்க்கும் வகையில் சென்னையில் ஃபார்முலா4 கார் பந்தயத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்த அவர்களுக்கு நெல்லை மாநகர தி.மு.க சார்பாக வாழ்த்துகள்.

4.வரும் 2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத்தேர்தலுக்கான பணிகளைத் தொடங்க வலியுறுத்தி,கழகத்தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்துள்ளார். எனவே 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் அதிகமான இடங்களில் கழகம் வெற்றிபெற்று மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்கும் வகையில் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியை தி.மு.க.வின் கோட்டையாக மாற்றும் வகையில் அனைவரும் பணியாற்றுதல்.

5.கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில்,கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் அறிவுறுத்திய படி, மாநகர கழகம், பகுதிக் கழகம் மற்றும் வட்டக் கழக அளவில் அமைக்கப்பட்டுள்ள கழக கொடிக் கம்பங்களின் எண்ணிக்கையை கணக்கெடுத்து, புதுப்பிக்கப்பட வேண்டிய கழக கொடிக்கம்பங்களை உடனடியாக புதுப்பிக்க நடவடிக்கை எடுத்தல்.

6.நம் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட காலம் முதல், நம் கழகக் கொள்கைகளை பரப்பிடவும், தேர்தல் விளம்பரம் மற்றும் தேர்தல் வெற்றிக்கு சுவர் விளம்பரங்கள் மிக முக்கிய பங்காக உள்ளன. எனவே தலைமைக் கழகத்தின் அறிவுறுத் தலின்படி,கழக முப்பெரும் விழா, சின்னவர் பிறந்தநாள் விழா,கழகத் தலைவர் பிறந்தநாள் விழா, முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா தொடர்ச்சியாக சுவர் விளம்பரங்கள் செய்து கழகப் பணியாற்றுதல்.

7.2021ஆம் ஆண்டு கழக அரசு பொறுப்பேற்றது முதல்,கழக அரசு கொண்டு வந்துள்ள மக்கள் நலத்திட்டங்கள்,கழக அரசின் சாதனைகள் என அனைத்தையும் எடுத்துரைத்து,மாநகர கழக நிர்வாகிகள்,பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து சார்பு அணியின ரும் சுவர் விளம்பரங்கள் செய்தல்.

8.2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத் தேர்தலில் பாளையங்கோட்டை மற்றும் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதிகளில் கழகத்திற்கான வெற்றிப் பாதையை அமைக்க அனைத்து நிர்வாகிகளும் ஒன்றிணைந்து இரவு,பகல் பாராது உழைத்தல்.

9.திருநெல்வேலி மாநகராட்சியை சேர்ந்த கழக மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும், கழகத்திற்கும்,முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கும்,இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், திராவிட மாடல் ஆட்சியின் பெயருக்கும் புகழுக்கும் எவ்வகையிலும் களங்கம் ஏற்படுத்தாமல், அனைவரும் ஒற்றுமையுடன் மக்கள் நலப் பணிகளிலும், கழகப் பணிகளிலும் ஈடுபட்டு கழகத்திற்கும், தளபதியாருக்கும், சின்னவருக்கும் பெருமை சேர்த்திட வேண்டும்.

10.தலைமைக் கழகத்தின் அறிவுறுத்தலின் படி,நெல்லை மாநகர கழகத்திற்கு உட்பட்ட பகுதிகழகங்களுக்கு,நிரப்பப்பட உள்ள 23 சார்பு அணிகளுக்கான பட்டியலை, அந்தந்த பகுதிகளுக்கு உட்பட்ட, பகுதிக் கழக செயலாளர்கள்,கழக குடும்பங்களைச் சேர்ந்தவர்களை தேர்ந்தெடுத்து அவர்களின் பட்டியலை மாநகர கழக அலுவலகத்தில் வரும் 10.09.2024 தேதிக்குள் சமர்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறுதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தென்காசி மாவட்டத்தில் பல்வேறு துறை சார்பில் நடந்து வரும் பணிகளை சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் காந்திராஜன்,குழு உறுப்பினர்கள் அம்பேத்குமார், கருமாணிக்கம்,சதன் திருமலைகுமார்,ராஜா,சின்னத்துரை, ராமச்சந்திரன்,பன்னீர்செல்வம், பாலாஜி,மணியன்,வெங்கடேஸ்வரன் மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர், முதன்மை செயலாளர் சீனிவாசன் உள்பட அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### தே.கல்லுப்பட்டி முரசொலி முகவர்

# ரா.வீமராஜ் இல்ல மணவிழா!

## கழகத்தினர் வாழ்த்து!

*மதுரை, செப். 5-* தே.கல்லுப்பட்டி முரசொலி முகவர் ரா.வீமராஜ் - வீ.முத்துமணி இவர்களது புதல்வர் வி.கௌதம், ஜெ.செல்லத்துரை - சி. கவிதா ஆகியோரது புதல்வி திருநிறைச் செல்வி சி.சிவசங்கரி இவர்களது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நாளை (6.9.2024 - வெள்ளிக்கிழமை) மதுரை திருப்பரங்குன்றம் ஸ்ரீசுப்பிரமணிய சாமி திருக்கோவிலிலும் மற்ற வைபவங்கள் காலை 8.01க்கு மணிக்குமேல் தே. கல்லுப்பட்டி அக்ரஹாரம் வீதியில் அமைந்துள்ள கம்மவர் திருமண மஹாலில் நடைபெறுகிறது.

மணவிழாவில் ஆன்றோர்கள், சான்றோர்கள், கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

### திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றியம்

# அரசூரில் கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## உதயசூரியன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவெண்ணைநல்லூர், செப். 5 -

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதி,திருவெண்ணெய் நல்லூர் கிழக்கு ஒன்றிய கழகப் பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் அரசூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது,இந்த கூட்டத்திற்கு கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ம.சந்திர சேகரன் தலைமை வகித்தார். ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், ஒன்றிய கழக அவைத்தலைவர் கலியவரதன், மாவட்ட கழக துணைச் செயலாளர் பிரபாவதி தாமோதரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதய சூரியன் எம்.எல்.ஏ, வடக்கு மாவட்ட கழக அவைத்தலைவர், தமிழ்நாடு கால் நடை ஆட்சி மன்ற குழு உறுப்பினர் ஆ.ஜெ.மணிக் கண்ணன் எம்.எல்.ஏ ஆகியோர்கள் கலந்து கொண்டு பல்வேறு கருத்துகளை முன்வைத்து கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள்.

மேலும் இக்கூட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை கிளைகள் தோறும் கொண்டாடுதல், பேரறிஞர் அண்ணாவின் 115வது பிறந்தநாள் விழா,கழகத்தின் 75 ஆம் ஆண்டு பவள விழா, தந்தை பெரியார் 145வது பிறந்தநாள் விழா உள்ளிட்ட விழாக்களை மிகச் சிறப்பான முறையில் கொண்டாடுதல், சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் அதிக அளவில் பங்கு பெறுதல், கழக சார்பு அணிகளுக்கு ஒன்றிய அளவில் நிர்வாகிகளை தேர்வு செய்தல், ஒன்றியங்களில் உள்ள அனைத்து கிராமங்களிலும் தெருமுனை பிரசாரக் கூட்டங்கள் நடத்துவது,மகளிர் அணியில் அதிக உறுப்பினர்களை சேர்ப்பதற்கு உதவி செய்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இதில் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை தலைவர் வழக்கறிஞர் கரிகாலன், சுப்ரமணியன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஜெயந்தி சக்திவேல், நாராயணன், பொருளாளர் மைக்கேல், கிருஷ்ண மூர்த்தி, கிராமம் ஸ்ரீதர், சக்கரவர்த்தி மற்றும் திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் கிளைக் கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

சேலம் மத்திய மாவட்டம் சேலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்டக் கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஒன்றிய கழக நிர்வாகிகள். ரெயின் போ நடராஜன், ராமச்சந்திரன். 'பூபதி, ஒன்றியக் குழு தலைவர் மலர்க்கொடி ராஜா, விவசாய அணி அமைப்பாளர். ராஜா, பொதுக்குழு உறுப்பினர் ராஜேந்திரன், செளந்தர்ராஜன், ராஜஸ்வரி. சசிகுமார், விஜயன். கார்த்திகேயன், போதம்மாள், கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.